அருட்செய்தி தொடர்பான பின்குறிப்பு

# ஐக்கியநிலைக்கு பின் தொடரும் பயணம்:
## நீரானது, தான் ஹைட்ரஜனாக இருந்ததை மறந்துவிடும்போது



## பூஜ்ய தாஜி அவர்களின்

70வது பிறந்த நாளை முன்னிட்டு வழங்கப்பட்டது

28 செப்டம்பர் 2025, கான்ஹா சாந்தி வனம்



# அருட்செய்தி தொடர்பான பின்குறிப்பு

## ஐக்கியநிலைக்கு பின் தொடரும் பயணம்:

### நீரானது, தான் ஹைட்ரஜனாக இருந்ததை மறந்துவிடும்போது

அன்பானவர்களே,

ஆன்மீகப் பயணம் ஒரு அடிப்படையான முரண்பாட்டை முன்வைக்கிறது: இறுதி லட்சியம் என்பதாக நாம் காணும் ஒன்று, உண்மையில் மெய்யான வளர்ச்சியின் தொடக்க நிலை மட்டுமே. 2025 செப்டம்பர் பண்டாராவின்போது பகிர்ந்துகொள்ளப்பட்ட அருட்செய்தியின் மையக்கருத்தாக இருக்கும் இந்த நுண்ணறிவு - முன்னேற்றம், வெற்றி மற்றும் ஆன்மீக மெய்யுணர்தல் பற்றிய நமது அடிப்படை கருத்துகளை மறுபரிசீலனை செய்யத் தூண்டுகிறது.

நமது மக்கள், இறுதிப் பலன்கள் மீதே தீவிர ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர். பட்டம் பெறுதல், பணியிலிருந்து ஓய்வு பெறுதல் மற்றும் அகஒளி பெறுதல் போன்றவையே இறுதி நிலை என்று நாம் எண்ணுகிறோம்.

ஆனால் இயற்கை நமக்கு வேறொரு உண்மையை எடுத்துரைக்கிறது. மண்ணிற்கு அடியில் இருளில் போராடி, பிறகு மண்ணைத் துளைத்து வெளியே வருவதுடன் ஒரு விதையின் பயணம் முடிவடைந்துவிடுகிறதா? இல்லை, அது வெறும் தொடக்கம் மட்டுமே. துளைத்து வெளியே வருவது அதன் இலக்கு அல்ல; அது, ஒளிச்சேர்க்கை, வளர்ச்சி, காய்கனிகளை வழங்குதல், நிழல் அளித்தல் மற்றும் இறுதியில் புதிய விதைகளுக்கு மண்ணாக மாறுதல் போன்ற முக்கியமான அனைத்து வளர்ச்சி நிலைகளுக்குமான முதல் படியாகும்.

ஐக்கிய நிலையை அடைந்ததும் நீங்கள் தொடக்க நிலையில் உள்ளவராகிறீர்கள் என்று பாபூஜி கூறியபோது, அவர் இதைத்தான் குறிப்பிட்டார். ஒரு துளியாகவே இன்னும் இருந்துகொண்டு, சமுத்திரத்துடன் இணைவதைக் கொண்டாடும் அந்தத் துளியானது, உண்மையில் ஐக்கிய நிலையை அடையவில்லை. உண்மையான ஐக்கிய நிலையைக் கொண்டாடுவதற்கு அங்கு ஒருவரும் எஞ்சியிருப்பதில்லை. இது ஒரு மிகப்பெரிய முரண்பாடு.

## மாற்றத்திற்குள் மறைந்துள்ள அறிவியலும் தத்துவமும்


வேதியியலின் அடிப்படை கருத்துக்கள் நமக்கு கற்பிக்கும் ஆழமான பாடத்தை கவனியுங்கள்: ஹைட்ரஜன் எளிதில் தீப்பற்றக் கூடியது, ஆபத்தானது மற்றும் எளிதாக கசியக்கூடியது; ஆக்ஸிஜன், நெருப்பிற்கு ஆற்றல் அளித்து, அனைத்தையும் எரியச் செய்கிறது. எனினும், இரண்டும் இணையும்போது, அவை அழிவையா குறிக்கின்றன? அவை ஒன்றிணைந்து, உயிர்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கும் நீரை உருவாக்குகின்றன. ஆனால் அதிலுள்ள ஆழமான உண்மை இதுதான்: நீர், தான் ஹைட்ரஜனாக இருந்ததை நினைவில் கொள்வதில்லை. வெடிக்கும் தன்மை என்பது உள்ளுறைந்த அளவில்கூட அதற்கு இனியும் இல்லை. அதன் உண்மையான இயல்பு இனியும் அங்கு

இருப்பதற்கான சாத்தியக்கூறு இல்லாத அளவிற்கு, அந்த தன்மைமாற்றம் மிகவும் முழுமையாக நிகழ்ந்துள்ளது.

இதை, ஆன்மீக ரீதியாக நாம் எவ்வாறு வளர்ச்சி அடைகிறோம் என்பதுடன் தொடர்புபடுத்தலாம். ஆன்மீக வளர்ச்சி என்பது நம்மை சில வகையில் மேம்படுத்திக்கொள்வது, உதாரணத்திற்கு புதிய விஷயங்களைக் கற்பது அல்லது சில திறன்களை வளர்த்துக்கொள்வது என்பதாகவே பெரும்பாலும் நினைக்கின்றோம். ஆனால் உண்மையான மாற்றம் என்பது மிகவும் உள்ளார்ந்தது. உங்கள் அகங்காரத்திற்கு நீங்கள் வலுசேர்ப்பதில்லை; முற்றிலும் வேறுபட்ட ஒரு நோக்கத்திற்காக முழுவதும் வேறுபட்ட ஒருவராக நீங்கள் மாறுகிறீர்கள்.

*ஸ்வதர்ம* அதாவது உங்களது தனிப்பட்ட கடமை அல்லது நோக்கம் குறித்து பகவத் கீதை விளக்குகிறது. ஆனால் உங்களது *ஸ்வபாவ* - அடிப்படை இயல்பு மாற்றமடையக் கூடிய அளவிற்கு, உங்களது மாற்றம் மிகவும் ஆழமானதாக

ஆன்மீக வளர்ச்சி என்பது நம்மை சில வகையில் மேம்படுத்திக்கொள்வது, உதாரணத்திற்கு புதிய விஷயங்களைக் கற்பது அல்லது சில திறன்களை வளர்த்துக்கொள்வது என்பதாகவே பெரும்பாலும் நினைக்கின்றோம். ஆனால் உண்மையான மாற்றம் என்பது மிகவும் உள்ளார்ந்தது. உங்கள் அகங்காரத்திற்கு நீங்கள் வலுசேர்ப்பதில்லை; முற்றிலும் வேறுபட்ட ஒரு நோக்கத்திற்காக முழுவதும் வேறுபட்ட ஒருவராக நீங்கள் மாறுகிறீர்கள்.



இருந்தால் என்ன நிகழும்? நீரினுடைய தர்மம், ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனின் தர்மத்தை ஒத்தது அல்ல. அதன் புதிய தர்மம், பாய்ந்தோடி, ஊட்டமளித்து, தூய்மைப்படுத்தி, உயிர்களை காப்பதே ஆகும்.

செய்தி: நாம் சிறந்த நீர் துளிகளாக மாறுவதில்லை. "நீர்த்துளியின் தன்மை" என்பது நமது உண்மையான இயல்பாக என்றுமே இருந்ததில்லை என்பதையே நாம் கற்றுக்கொள்கிறோம். மிக முக்கியமான இந்தப் புரிதல்கூட, நமது உண்மையான பணியைத் தொடங்க நம்மை தயார்படுத்துவதாக மட்டுமே உள்ளது.

இது, அன்றாட வாழ்க்கையில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகிறது? முதலில், பிரச்சினைகள் மற்றும் சவால்களை நாம் எவ்வாறு அணுகுகிறோம் என்பதை இது மாற்றுகிறது. புரிதல் உடைய ஒருவர், போக்குவரத்து நெரிசல்களை தங்களது பயணத்தில் ஏற்படும் ஒரு பிரச்சினையாகக் காண்பதில்லை. அவர்கள் தங்களை அந்த நிகழ்வின் ஒரு பகுதியாகக் காண்பதால், அது அவர்கள் எதிர்வினையாற்றும் விதத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவர்கள் வேறொரு வழியை தேர்ந்தெடுக்கலாம், அதை அவர்கள், "நான் விரைவாக அங்கு செல்ல வேண்டும்" என்ற எண்ணத்தினால் அல்லாமல், அது அனைவருக்கும் பயனளிப்பதாக இருக்கும் என்பதால் செய்யக் கூடும்.

இந்தப் புரிதல் உறவுமுறைகளில் அனைத்தையும் மாற்றிவிடுகிறது. நீர்த்துளிகள் இரண்டும் இணைந்திருக்க விரும்புவதாக பறைசாற்றிக் கொண்டாலும், விலகி இருக்க முயற்சிக்கும்போதுதான் பெரும்பாலான பூசல்கள் உருவாகின்றன. தாங்கள் ஒருபோதும் தனித்தனியான துளிகள் அல்ல, மாறாக அதே நீரின் வெவ்வேறு வெளிப்பாடுகளே என்பதை இருவரும் உணரும்போது, அவர்கள் இனியும் தனித்தனியானவர்களாக இருப்பதில்லை.

வேத மரபுகள் *ப்ரயத்ன* (முயற்சி) மற்றும் *ப்ரஸாத* (அருள்) இவற்றைப் பற்றி பேசுகின்றன. ஐக்கியமடைதலுக்கு முன் நாம் சமுத்திரமாக மாறுவதற்கு முயற்சிக்கிறோம். ஐக்கியமடைந்த பின்னர், துளியாக நம்மை பாவித்துக்கொண்டு, எப்போதும் சமுத்திரமாகவே

இருந்துள்ளோம் என்பதை உணர்கிறோம். ஆனால் அதன் பின் வருவதுதான் மிகவும் சவாலான பகுதி: நாம் சமுத்திரம் என்பதை அறிந்திருந்தும், துளியாக இருப்பதைத் தேர்வு செய்வது, புதிர்கள் நிறைந்த ஒரு முரண்பாடாகும்.

இந்தக் காரணத்தினால்தான், பாபூஜி இதை தொடக்கம் என்று கூறுகிறார். ஒரு நடிகர், தான் நடிக்கும் ஒரு கதாபாத்திரத்திலேயே மூழ்கிவிடக்கூடும். ஆனால் நீங்கள் நடித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்திருக்கும் அதேவேளையில், அந்த கதாபாத்திரமாக உங்கள் பங்கை நீங்கள் முழுமையாக ஆற்ற முடியுமா? முழுவதுமாக மனிதராக இருந்துகொண்டு, நீங்கள் தெய்வீகமானவர் என்பதை அறிந்துகொள்வது சாத்தியமா? எல்லையற்ற ஒன்றில் இருந்தபோதும், உங்களது உடல் எவ்வாறு வரையறைக்கு உட்பட்டதாக உள்ளது என்பதை உங்களால் உணர முடியுமா?

மாற்றமடைவதற்கான திறனே நம்மை சக்திவாய்ந்தவர்களாக ஆக்குகிறது.

## வரையறுத்தல் குறித்த விவேகம்

இங்குதான் தத்துவம் உண்மையான வாழ்விற்கு ஏற்புடையதாகிறது. நீர், தான் இருக்கும் பாத்திரத்தின் வடிவத்தை ஏற்றுக்கொள்வது, தன்னை வடிவமைத்துக்கொள்ள இயலாது என்பதால் அல்ல, மாறாக வடிவமின்றி இருப்பது பயனுள்ளதாக இல்லை என்பதால்தான். நீர், ஒரு குவளையில் இருக்கும்போது அருந்துவதற்கு ஏற்றதாகிறது. மேகங்களில் நுழைந்து மழையாக மாறுகிறது. இரத்த நாளங்களில் ஓடி ஜீவிதமாகவே மாறுகிறது. அதைப் போன்று, மாற்றமடைவதற்கான திறனே நம்மை சக்திவாய்ந்தவர்களாக ஆக்குகிறது.

ஐக்கியமடைந்த பின், பயணம் என்பது வரையறைகளை, பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் என்பதாகக் காணாமல், அவற்றைப் படைப்பாற்றல் கொண்ட தெரிவுகளாக காண்பதற்கு கற்றுக்கொள்வதாகும். உங்களது தற்போதைய வாழ்க்கையின் வடிவத்தை, கட்டாயத்தினால் அன்றி, மகத்தான குறிக்கோளுக்கு ஏற்றதாக அமைந்திருப்பதால் தேர்ந்தெடுத்துள்ளீர்கள்.

"நான் ஐக்கியமடைந்துவிட்டேன்" என்று கூறும் ஆன்மீக அகங்காரம்தான் மிகவும் ஆபத்தான வலைப்பொறி ஆகும். இது ஹைட்ரஜன் தன்னை நீராக பாவனை செய்துகொண்டு, இன்னும் ஹைட்ரஜனாகவே இருப்பதைப் போன்றது. உண்மையான நீர், தான் யார் என்று கூறத் தேவையில்லை. அது பாய்ந்தோடுகிறது, ஊட்டமளிக்கிறது, சுத்தப்படுத்துகிறது. அதன் இருப்பே அதற்கான பிரகடனம் ஆகும்.

இந்தப் புரிதல், மிகுந்த "ஆன்மீகத்தன்மை" உடையவர்களாக இருப்பதற்கு நாம் முயற்சிசெய்து சோர்வடைவதிலிருந்து நம்மை விடுவிக்கிறது. நாம் அனைத்தையும் அறிந்தவர் போல் காண்பித்துக்கொள்ளத் தேவையில்லை. அசாதாரணமான முறையில் உரையாட வேண்டிய அவசியமில்லை. நீரைப் போன்று — எப்போதும் தயாராக, உதவக்கூடியவராக, அத்தருணத்தின் தேவை உணர்ந்து அதற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்பவராக நீங்கள் இருப்பதே போதுமானது.

## முடிவில்லா சேவை

கணித மேதைகள், பற்பல அனந்தங்கள் இருப்பதாகவும், அவை ஒவ்வொன்றும் மற்ற அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், ஆனால் ஒவ்வொன்றும் வேறுபட்டதாகவும் இருப்பதைக் கண்டறிந்தபோது, அவர்கள் ஒரு ஆன்மீக நிதர்சனத்தை உணர்த்தினர். ஐக்கியம் அடைந்துவிட்ட பின்னர், பயணம் என்பது

உயர்நிலைகளைப் பெறுவதைப் பற்றியது அல்ல. அது வரையறைகளுக்குள் சேவை செய்வதற்கான எண்ணற்ற வழிகளைக் கண்டறிவதைப் பற்றியதாகும்.

> ஐக்கியம் அடைந்துவிட்ட பின்னர், பயணம் என்பது உயர்நிலைகளைப் பெறுவதைப் பற்றியது அல்ல. அது வரையறைகளுக்குள் சேவை செய்வதற்கான எண்ணற்ற வழிகளைக் கண்டறிவதைப் பற்றியதாகும்.

இது, தன் குழந்தைக்கு உணவூட்டுகின்ற ஒரு தாயால் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது. அவள் தன் குழந்தையை கவனித்துக்கொள்வதற்கு, பிரபஞ்சத்தைப் பற்றி அறிந்திருக்கத் தேவையில்லை. ஒரு பெண்ணாக இருப்பதிலிருந்து, ஒரு தாயாக மாறிய அவளது மாற்றம், முழுமை பெற்றதாகவும், அவள் ஆற்ற வேண்டிய கடமைக்கு மிகவும் ஏற்றதாகவும் உள்ளது. ஆனால் இதில் “வரையறைகள்” இருந்தாலும், அன்பின் முடிவற்ற நிலையை அவள் உணர்த்துகிறாள்.

இந்த கற்றல், ஆன்மீகப் பயிற்சிகளை நாம் அணுகும் விதத்தை மாற்றிவிடுகிறது. உன்னதமான ஒன்றை, அசாதாரணமான அனுபவங்களில் தேடாமல், அன்றாட செயல்பாடுகளில் உணர்வதற்கு நாம் கற்றுக்கொள்கிறோம். பாத்திரங்களைக் கழுவுதல், எவ்வாறு அனைத்தும் மாற்றமடைகின்றன என்பதற்கு ஒரு பாடமாக அமைகிறது. சுவாசிக்கும் செயல்முறை, அத்தியாவசியமானதை எவ்வாறு பரிமாற்றம் செய்துகொள்வது என்பதை எடுத்துக்காட்டுகிறது. நாம் ஒவ்வொரு முறை உரையாடும்போதும், வரையறைகளை விழிப்புடன் வகுத்துக்கொண்டு அன்புடன் உரையாடுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறோம்.

வரையறைகளற்று இருப்பது நமக்கு அதிகப்படியான சுதந்திரத்தை அளிக்காது. அது நீர், திடமாக இருப்பதற்கு பனிக்கட்டியாகவும், உயர எழுவதற்கு நீராவியாகவும் அல்லது பாய்ந்தோடுவதற்கு திரவமாகவே இருந்திட தேர்வு செய்வதைப் போன்றது. ஒவ்வொரு நிலையும் பரிபூரணமாகவே உள்ளது. மேலும் அவற்றிற்கிடையே நிகழும் மாற்றங்கள், தேவைக்கேற்ப மிகவும் இயல்பாக நடைபெறுகின்றன. அந்த மாற்றம், தங்களது தற்போதைய நிலையில் மக்கள் மகிழ்ச்சியற்று இருப்பதால் ஏற்படவில்லை. ஒருவேளை, இதுதான் உண்மையான சுதந்திரமாக இருக்கலாம்.

வாழ்க்கைக்கான ஒரு செய்தி: உங்களது அன்றாட செயல்பாடுகளில் ஈடுபடும்போது, ஒரு சமுத்திரமாக மாறுவதற்கு நீங்கள் முயற்சிக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். தருணத்திற்கேற்ப நீர் எவ்வாறு மாற்றம் பெறுகிறதோ, அதைப் போன்று வாழ்வதற்கு நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள். நீரை அருந்தும்போது, உயிர்களுக்கு உதவும் விதமாக, எவ்வாறு ஹைட்ரஜனும் ஆக்சிஜனும் தங்களது தனித்துவத்தை விட்டுக்கொடுத்துள்ளது என்பதை எண்ணிப்பாருங்கள். பிரச்சினைகள் ஏற்படும்போது நீரைப்போல இருங்கள். மேலும் உங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமல்லாமல், உங்களைச் சுற்றியுள்ளவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமான பாதையை தேர்ந்தெடுங்கள்.

ஐக்கியமடைந்த பின், பயணம் என்பது மேலும் உயர்நிலைகளை அடைவதைப் பற்றியதல்ல. உள்ளார்ந்த நோக்கத்துடன் விட்டுக்கொடுப்பதால் நீங்கள் என்னவாக மாற முடியும், உங்களை வரையறைக்குள் உட்படுத்திக்கொள்வதை தேர்வு செய்தபோதும், நீங்கள் எவ்வாறு சேவை செய்ய முடியும் மற்றும் நீங்கள் எல்லையற்ற வடிவத்தைக் கொண்டவர் என்பதை உணர்ந்த போதிலும், வரையறைக்கு உட்பட்ட வடிவத்தை ஏற்றுக்கொண்டு

எவ்வாறு அன்பு செலுத்த முடியும் எனக் கண்டறிவதைப் பற்றியதாகும்.

அனைத்து பாதைகளுக்கும் அப்பால் கடந்துசெல்கின்ற பாதையற்ற பாதை இதுவே. ஒரு பாதையை உருவாக்குவது என்பது உங்கள்மீது உங்களுக்கான சுதந்திரத்தை புகுத்திக்கொள்வதாகும். மாஸ்டர்களிடம், 'அகஒளி பெற்ற பிறகு என்ன நிகழும்' என்று கேட்டால், அவர்கள் புன்னகைக்கிறார்கள். அவர்கள் உங்களிடம் ஒரு குவளை நீரை வழங்கி, சாதாரண ஒன்றில் எல்லையற்றதைக் கண்டறிவதற்கும், மிக எளிமையான ஒன்றில் ஆழமான விஷயங்களைக் கண்டறிவதற்கும், போதுமானவற்றில் அனைத்தையும் கண்டறிவதற்கும், தேவையான அளவு இருப்பவற்றிற்குள் முழுமையைக் காணும் நிலையை நீங்கள் அடைவதற்கும் அவர்கள் காத்திருக்கிறார்கள்.

இவ்வாறான மெய்யுணர்தலில், மிகவும் அற்புதமான மாற்றம் நிகழ்கிறது - இது சாதாரமான ஒன்று, புனிதமாக மாறுவதால் அல்லாமல், அது எப்போதுமே அவ்வாறுதான் இருந்துள்ளது என்பதை நீங்கள் இறுதியில் உணர்வதால் நிகழ்கிறது. நீர், எப்போதும் புனிதமானதுதான். அதை எவ்வாறு காண்பது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டியதே அவசியமாகும்.

மகோன்னத மாஸ்டரிடம் பிரார்த்தனைகளுடன்,

கம்லேஷ்

